**14 இந்திரன்முடிமேல்வளைஎறிந்தபடலம்**

உக்ரவர்மன்செங்கோல்செலுத்திவரும்காலத்தில், மழையின்றி பயிர்கள் கருகின. சேர, சோழ, பாண்டிய மூன்று நாடுகளும் வறுமையில் வாடிவதங்கின. \

மூவேந்தர்களும் அகத்திய முனிவரிடம் சென்று, நாட்டின் நிலைமையைக் கூறினர். கிரகங்களின் இடம் சரிவர அமையாததால் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் வாடநேரிடும் என்றும், இதைத்தவிர்க்க, மழையை பொய்விக்கும் இந்திரனிடத்துச் சென்று வேண்டுமாறு கூறினார்.

மூவேந்தரும் இந்திரனுக் காண எவ்வாறு விண்ணுலகம் செல்வது என்று வினவ, சோமவார விரதமிருந்து, வெள்ளியம் பலத்தானின் திருவருளைப்பெற்று, விண்ணுலகம் செல்லலாம் என்று கூறி, இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் முறையையும் கற்பித்தார் அகத்தியர். அவர் கூறியபடி மூவேந்தரும் பொற்றாமரைக் குளத்தில் நீராடி, சோம வார விரதத்தை அனுஷ்டித்தனர்.

அவ்விரத்தின் பயனைப் பெற்று ஆகாய மார்க்கமாகப் புறப்பட்டுச் இந்திரலோகம் சென்றனர்.

இதனை அறிந்த இந்திரன், மூவரும் அமர தனது சிங்காசனத்திற்கு தாழ்த்திருக்குமாறு மூன்று ஆசனங்களைப் போட்டுவைத்தான். சேரனும், சோழனும்அவரவர்ஆசனங்களில்அமர,பாண்டியன் மட்டும் இந்திரனுடைய சிங்கானத்தில் ஏறி, அவனோடு சரிசமமாக அமர்ந்தான்.

இந்திரன் பாண்டியனிடத்துப் பொறாமைக்கொண்டான். சேர, சோழ, மன்னர்கள் வந்த விவரம் கேட்டு அவர்களின் நாடுகளுக்கு மட்டும் மழை பெய்ய அருளி, அவர்களுக்கு பரிசும் கொடுத்து அனுப்பினான்.

இதுவரை பேசாதிருந்த உக்ரவர்மனுக்கு, பல கிங்கரர்களாலும் சிரம்பட்டே தூக்கமுடிந்த முத்தாரம் ஒன்றை அளித்தான். பாண்டியனும் அதனை மலர் மாலையைப் போல் தனது கழுத்தில் எளிதாக எடுத்து அணிந்துக் கொண்டான். இந்திரன் வியப்படைந்து பாண்டியனை இன்று முதல் உலகம் 'ஆரம் தாங்கும் பாண்டியன்' என்று புகழ்ந்தான். இதனைப் பொருட்படுத்தாமல் பாண்டியன் மதுரை வந்தடைந்தான்.

சேர, சோழநாடுகளில் மட்டும் இந்திரன் அருளால் மழைப் பொழிந்து நாடுசெழித்தது. பாண்டியநாடுமட்டும்மழையின்றிதவித்தது. பாண்டியன் ஒரு நாள் பொதிகை மலைச்சாரலில் வேட்டையாடும் பொழுது, அங்கிருந்த 'புட்கலாவருத்தம், சங்காரித்தம், துரோகம், காளமுகி 'என்னும் மேகங்களையும் சிறைப் பிடித்தான்.

ஒரு மனிதனுக்கு இவ்வளவு வலிமையா என்று வியந்த இந்திரன், பொறாமைக் கொண்டு மதுரையை சூழ்ந்துக் கொண்டு பாண்டியனுடன் கடுமையாகப் போரிட்டான். கடைசியில் இந்திரன் வஜ்ரபடையைத் தொடுக்க, பாண்டியன், தன் கையிலிருந்த வளையை சுழற்றி விரைந்து வீசினான். அவ்வளை வஜ்ரபடையை வீழ்த்தி இந்திரனுடைய மகுடத்தை தள்ளிச் சிதைத்தது.

நாணம் கொண்ட இந்திரன் பாண்டிய நாட்டிற்கு மழைவளம் தருவதாக கூறி, தன் மேகங்களை விடுவிக்குமாறு வேண்டினான். முதலில் உக்ரவர்மன் இதை நம்பவில்லை. பின் இந்திரனுடைய நண்பன் வேளாளன் பிணைக் கொடுக்க நான்கு மேகங்களையும் உக்ரவர்மன் சிறைவிடுத்தான்.
பாண்டியநாட்டிலும்மும்மாறிபெய்துபழையபடிநாடுவளம்பெற்றது.

**பல்லவி**

அகத்தியர் சொற்படி சோமவார விரதமிருந்து
அமரேசனிடம் சென்றனர் மழை வேண்டி மூவேந்தரும்

**அனுபல்லவி**

நிகராய் உக்ரன் அமரன் அருகிலமர்ந்து அவன் தந்த
கனமான முத்தாரத்தை மலர்மாலைப் போல் அணிந்தான்

**சரணம்**

மேகங்களை உக்ரன் சிறையில் அடைக்கச் செய்தாய்
அமரேசன் மீது வளை வீசிடச் செய்தாய்
ஏகமாய் உன்னை பூஜித்ததால் இந்திரன்
தலை சிதறாமலே முடிசிதறச் செய்தாய்